தமிழ்ச் சிட்டு

தனித்தமிழ்ச் சிறுவர் கலை இதழ்

குரல்: 5.

இசை: 8.

லை:

காசு.

அருமைச் சிறுவர்காள்!

அருமைச் சிறுவர்காள்!
அன்றாடம் உங்கள்
பெருமை பிறங்குமா
றொன்றுசெய்க! பின்றைப்
பெருமைக்கும் ஏனைச்
சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்!

ஒன்றறிவிர்; தீய நினை
வோங்கின் ஒழுங்குகெடும்!
அன்றன்று தீமை
அகற்றுங்கள்! பின்றைவரும்
நன்றிக்கு வித்தாகும்
நல்லொழுக்கம்; தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்!

மழுக்கலுறும்; சிற்சிலகால்
மாயங்கட் கேங்கும்;
அழுக்கடையும்; காண்பொருள்மேல்
ஆசை கொள்ளும், உள்ளம்.
இழுக்கல் உடையுழி
ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல்!

பழச்சொல்லும் பற்சிரிப்பும்
கொண்டு பழகி
அழச்சொல்லி விட்டகல்வார்
தாமகல்க! என்றும்
அழச்சொல்லி அல்லது
இடித்து வழக்கறிய
வல்லார்நட் பாய்ந்து கொளல்!

‘மன்பதையுள் என்றும்
மனக்கோட்டம் துன்பம்’—எனத்
தென்போ டெதையும்
தெளிந்து செய்க! அன்பிடையும்
இன்பம் விழையான்;
இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன்.

கேட்கின்ருன்; கொடு!

நல்லவனே, இல்லை
பொல்லா தவனே,
நாணம் விட்டே, உனை இரக்கின்ருன்—மானந்
துறக்கின்ருன்—தம்பி
'இல்லை'யென் ருதே;
'தொல்லை'யென் ருதே!
இருப்பதில் ஒருதுளி எடுத்துக்கொடு—இது
சரி;இது தவறெனும் ஆய்வை விடு!

குருடோ நொண்டியோ
கூனே கிழமோ
கூசிடாமல் உனைக் கேட்கின்ருன்—வாழ
வேட்கின்ருன்—தம்பி
திருடனென் ருதே;
தீயனென் ருதே!
தேய்ந்திடா(து); இருப்பதில் சிறிது கொடு—இது
தீது; இது சரி-எனும் ஆய்வை விடு!

நோயனே பேயனே
நோஞ்சனே தடியனே
நூறுபேர் நடுவில்கை யேந்துகின்ருன்—உயிர்
காந்துகின்ருன்—தம்பி
"போய் வா" என்பதும்
புகலு(ம்)உன் அறிவதும்
புன்மையென் றறிகுவாய்! கொடைபெரிது—இது
பொய்;இது மெய்-எனும் எடை சிறிது!

பொய்யனே மெய்யனே
போலியோ காலியோ
போக்கின்றி வந்துகை நீட்டுகின்ருன்—பல்லைக்
காட்டுகின்ருன்—தம்பி
வெய்ய உரைப்பதும்
வேண்டி மறைப்பதும்
விரும்பத் தகாதன; கொடை விரும்பு—பல
வீண்செல வில்இது சிறுதுரும்பு!

துரை-மாணிக்கம்

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்–5. | தி. பி. | ௨௲௨ | கன்னி– செப்டெம்பர். 71 | இசை–8.

கட்சிகளுக்கு இரையாகாதீர்!

கல்விப் பருவம் விலைமதிக்க முடியாத விளைச்சல் பருவம் விளைந்து முற்றாத பயிர் உணவுக்குப் பயன்படாதது போல், கல்வி விளைச்சல் முற்றாத இளைஞர் பொது வாழ்க்கைக்குப் பயன் பெறுவதில்லை. மேலும் இளமைக் காலத்துப் பெறத்தவறிய கல்விப் பயனை வேறு எக்காலத்தும் பெறமுடியாது. எனவே மாணவப் பருவத்தில் படிப்பதைத் தவிர, அது தொடர்பற்ற வேறெதிலும் கருத்துச் செலுத்துதல் கூடாது. அவ்வாறு கருத்துச் செலுத்துவது அவர்கள் கல்வியையும் கெடுத்து, பிற்காலத்து அமையவிருக்கும் அவர்களின் வாழ்க்கை முன்னேற்றத்தையும் கட்டாயம் தடுத்துவிடும். பலதுறைகளைப் பற்றியும் அறிந்து கொள்ள வேண்டிய நிலையில், தங்களுக்குள்ள முழு ஆற்றலையும் ஒரே ஒரு துறையில் மட்டும் செலுத்துவது மற்ற துறைகளில் மாணவர்களை முடமாக்கி விடும். தமிழ் மொழிப் பற்றுக் கொண்டு அலையும் மாணவர்களில் சிலர் கூட பிற்காலத்துத் தமிழையும் சரிவரக் கற்காமல், பிற அறிவுத்துறை நூல்

வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்
தென்மொழி மின் அச்சகம், கடலூர்–1. தமிழகம்.

களையும் கற்காமல், வெள்ளிய அறிவினராய்த் தங்கள் வாழ்வைப் பாழடித்துக் கொள்கின்ற நிலைகளை நாம் நேரில் கண்டு வருந்த வேண்டியுள்ளது. இனி, கட்சிப் பற்று (பற்று அது; ஒருவகை வெறி) கொண்டவர்களைப் பற்றிக் கேட்கவே வேண்டியதில்லை.

நம் நாட்டில் உள்ள கட்சிகளில் பெரும்பாலானவை அரசியல் தொடர்பானவையே. அரசியல் தொடர்பற்ற ஒரு கட்சியையோ இயக்கத்தையோ பார்த்தல் முடியாது. தமிழ்மொழி முன்னேற்றத்திற் கென்று உள்ள மன்றங்களிலும், இலக்கியக் கழகம் என்பவற்றிலும் பெரும்பாலும் அரசியல் புகாமல் இருப்பதே இல்லை. காரணம் அரசியலில் எப்பொழுதுமே ஒருவகைக் கவர்ச்சி உண்டு. மாணவர்–களை அவை என்றும் கவராமல் இருந்ததில்லை. கொடி பிடித்துக் கொண்டு ஊர்வலம் போவதும், கொள்கை முழக்கங்கள் இடுவதும் மாலை மதிப்புகளை ஏற்பதும் மாணவர்களுக்கு விருப்பமான செய்திகள். மேலும் இக்கால் உள்ள அரசியல் தலைவர்களுக்கிருக்கும் மதிப்பு பேராசிரியர்களுக்கும் இருப்பதில்லை என்பதை அவர்கள் நேருக்கு நேராகக் கண்டு பெருமூச்செறிகின்றார்கள். இந்நிலை அவர்களின் பசுமையான உள்ளங்களில் மிகஆழமாகப் பதிகின்றது. எனவே தான் தங்கள் கண்களையும் கருத்துகளையும் மிகுதியாகக் கவர்ந்திழுக் கின்ற கட்சிகளின் வண்ண விசல்களில் மாணவர்கள் தங்கள் உள்ளங்களைப் பறி கொடுக்கின்றனர். ஆனால் இந்நிலை அவர்களுக்குத் தூண்டிலை விரும்பி விழுங்கும் மீன்களுக்குள்ள நிலையே ஆகும் என்பதை அவர்கள் முன்னர் உணர்வதில்லை. அவர்களின் இளமை வேகமும், எதையும் பற்றிக்கொள்ளும் இயல்பான துடிதுடிப்பும், எதிலும் விரைந்து ஈடுபடும் துருதுருப்பும் அவர்களை அவ்வாறு செயல்பட வைக்கின்றன. ஆனால் அரசியல்காரர்களோ இவர்களை எளிதில் தங்கள் வலைக்குள் இழுத்துப் போட்டுக் கொள்கின்றனர். தங்கள் கொள்கைகளால் இவர்களைக் கவரமுடியாது போனால் தங்கள் சார்பில் உள்ள திரைப்படக் கதாநாயகர்களைக் கொண்டு இவர்களின் உள்ள உணர்ச்சிகளை உறிஞ்சிக்கொள்கின்றனர். இவர் களின் ஆற்றலைத் தம் கட்சிகளுக்கெனச் சப்பி எடுத்துக் கொண்ட பின், சக்கை போன்ற இவர்களைத் தங்கள் பட்டம் பதவிகளால் நிறைவு செய்யாமல் துப்பி விடுகின்றனர். கல்வியையும் பாழடித்துக் கொண்டு தங்கள் ஆற்றலையும் இழந்து விட்ட இவர்கள் பின்னர் தட்டுத் தடுமாறித் தங்களுக்குற்ற வாழ்க்கைப் பாதையைக் கண்டு பிடித்து மெல்ல மெல்ல முன்னேறுகின்றனர். சிலர் தங்களுக்கு

ஏற்பட்ட கசப்பான பட்டறிவால் உள்ளம் நொந்து வாடிக்குலைந்து சோர்ந்து போகின்றனர்.

எனவே, மாணவர்கள் தங்களுக்குள்ள கல்விப் பருவத்தில் தமக்குற்ற கல்வியுடன், தம்மால் இயன்ற துறைகளையும் படித்து அறிந்து கொள்வதன்றி, அவற்றில் நேரடியாக ஈடுபட்டுத் தங்கள் வாழ்க்கையைச் சிதறடித்துக் கொள்ளாதிருப்பார்களாக.



உன்னைப் பற்றி....

உன்னால் ஓர் உண்மை கண்டு பிடிக்கப் படுகிற தென்றால், இருள் மண்டிய ஒரு வீட்டிற்கு நீ ஒளியை ஏற்றி வைக்கின்றாய் என்று பொருள். —இங்கர்சால்.

நீ, உனக்கென எதை விரும்ப மாட்டாயோ, அதை நீ பிறருக்குச் செய்யாதே. —கன்பூசியசு.

உன்னையே நீ நம்பு. —மாக்கியவல்லி.

உன்னையே நீ அறிய முடியாமல் உலகை அறிய முடியாது. —ஓர் அறிஞர்.

உனக்குப் பின்னால் வருவோர்க்குக் கதவைத் திறந்து விடுபவனாக நீ இரு; இந்த உலகைக் குருட்டுப் பாதையாக்கிவிட முயலாதே. —எமர்சன்.

உன்னால் சொல்லப்படுகின்ற ஒவ்வொரு சொல்லையும் நான் மறுக்கலாம்; ஆனால் நீ அதைச் சொல்ல உனக்குள்ள உரிமைக் காகச் சாகும் வரை நான் போராடுவேன். —வால்டேர்.

உன்னையே நீ எண்ணிப்பார். —சாக்ரடீசு.

உன்னுடைய திறமைகளைப் பிறர் உணரவில்லை என்று துன்ப முறாதே! பிறர் உன்னுடைய தகுதியையும் திறமையையும் உணரும் அளவுக்கு நீ நடந்து கொள்ளவேண்டும். —கன்பூசியசு.

உனக்கோ பிறருக்கோ பயன் தரும் என்றாலொழியப் பேசாதே; பயனற்ற உரையாடல்களைத் தவிர்த்துவிடு. —பிராங்க்ளின்,

உனக்கு நீயே உதவி செய்துகொள்; ஒவ்வொருவரும் உனக்கு உதவி செய்வார்கள். —மாக்கியவல்லி,

உன் தவறுகளைக் கண்டு வெட்கப்படாதே. அவ்வாறு செய்வது மீண்டும் தவறு செய்வதாகும். —கன்பூசியசு.

—தொகுப்பு: நா. கனகராசன், கீரனூர்.—

பிழையில்லாமல் எழுதப் பழகுங்கள்!

—பேரா. மு. வை. அரவிந்தன், கீ. க. மு

உரைநடை எழுதுபவர்கள் செய்யும் பிழைகளைக் கண்டு மனம் வருந்திய தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள்,

'தமிழைப் போல் உயர்ந்த மொழி
தரணிஎங்கும் கண்டதில்லை!
தமிழரைப்போல் மொழிக்கொலையில்
தலை சிறந்தோர் எவர் உளரே?'

என்று துன்பக் குரல் எழுப்பியுள்ளார்கள். பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள்,

'இலக்கணமும் இலக்கியமும் அறியாதான்
ஏடெழுதல் கேடு நல்கும்'

என்றும்,

'கெடல் எங்கே தமிழின் நலம் அங்கெல்லாம்
தலையிட்டுக் கிளர்ச்சி செய்க"

என்றும் தமிழர்களுக்கு அறிவுரை கூறியுள்ளார்கள்.

வருங்காலத் தமிழகத்திற்கு மாணவர்கள் நாற்றங்கால் போன்றவர்கள். நாளைய உலகம் அவர்களால் உருவாகப் போகிறது. வளரும் உள்ளத்தில், திருத்தமாகத் தமிழ் எழுதும் ஆர்வத்தை உண்டாக்க வேண்டும். அவ்வாறு செய்தால் பிழைகள் நீங்கும். நல்ல தமிழ், நாடெங்கும் நடமாடும்.

இயல்பாகச் செய்யும் தவறுகளை எடுத்துக்காட்டிப் பிழையின்றித் தமிழ் எழுத வரும்பும் மாணவர்கள் இப்பகுதியைத் தவறுமல் படித்துப் பயனடைய வேண்டும் என்று விரும்புகின்றோம். இவ்வகையில் ஒரு கட்டுரைத் தொடர் முன்னரே தமிழ்ச்சிட்டில் வெளியிடப் பெற்றுள்ளது. இஃது இரண்டாவது கட்டுரைத்தொடர்.

தமிழ் இன்று ஆட்சிமொழியாகவும் கல்வி மொழியாகவும் இருந்து பல்வேறு துறைகளில் சிறப்புப் பெற்றுவருகிறது. வளர்ந்து வரும் தமிழுடன் பல பிழைகளும் புகுந்து வருகின்றன. எழிலும் இனிமையும் கொண்ட தமிழ்–வலிவும் வனப்பும் உடைய தமிழ்–செழுமையும் செப்பமும் வாய்ந்த தமிழ் பிழைகளைச் சுமந்து நிற்பது

வருத்தம் தருகின்றது. இன்றைய சூழ்நிலையில் பிழைகளைச் சுட்டிக் காட்டுவதும் திருத்தமான தமிழை அறிமுகப்படுத்துவதும் தமிழறிந்தவர் கடமையாகின்றது.

'தமிழுயர்ந்தால் தமிழ்நாடு
தான் உயரும்! அறிவுயரும்!
அறமும் ஓங்கும்!
இமயமலை போல் உயர்ந்த
ஒரு நாடும் தன் மொழியில்
தாழ்ந்தால் வீழும்"

என்பது புரட்சிப்பாவலர் பாரதிதாசன் அவர்களின் எச்சரிக்கையாகும்.

மொழி ஆராய்ச்சியின் துணையும் இலக்கணத்தின் உதவியும் கொண்டு எளிய முறையில், பிழை-திருத்தம் பற்றிய விளக்கங்களைத் தருவது பலர்க்கும் பயன்படும். தமிழ் பயிலும் மாணவர்களுக்கு மட்டுமன்றி, நல்ல தமிழ் எழுத விரும்பும் அனைவர்க்கும் பயன்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் இப்பகுதி வெளிவருகின்றது.

I. நல்ல கையெழுத்து.

அழகான கையெழுத்தைப் பார்க்கும் போது மகிழ்ச்சி உண்டாகின்றது. முத்து முத்தாய் விளங்கும் எழுத்துகள் காண்பவர் உள்ளத்தில் படிக்கவேண்டும் என்னும் ஆர்வத்தைத் தூண்டுகின்றன. பிறர் கண்ணைக் கவரும் வகையில் அழகாக எழுதுவது ஓர் அரிய கலையாகும். நல்ல கையெழுத்திற்கு விரைவு, அழகு, தெளிவு என்னும் மூவகைப் பண்புகள் உண்டு. அழகாக இல்லை என்றாலும் தெளிவாக எழுதுதல் வேண்டும். அழகைக் கருதி மெல்ல எழுதுவதாலும் பயனில்லை.

திருத்தமற்ற கையெழுத்தை அரைகுறையான படிப்பிற்கு அறிகுறியாகக் கொள்ள வேண்டும் என்றும், கையெழுத்து நன்றாக இருக்கவேண்டியது கல்வியின் நோக்கங்களில் ஒன்று என்றும் காந்தியடிகள் தம் வாழ்க்கை வரலாற்றில் குறிப்பிட்டுள்ளார். காண்பவர் கண்ணைக் கவரும் வண்ணம் எழுத இயலாவிட்டாலும், பிறர் எளிதில் படித்துப் புரிந்து கொள்ளும் வகையிலாவது எழுத வேண்டும். ஒடித்தும் மடக்கியும் சிதைத்தும் எழுதுவதையாவது தவிர்க்க வேண்டும். ஓர் எழுத்தை மற்றோர் எழுத்தாகக் கருதிக்

குழப்ப மடையாமல் இருக்கும் வகையில் திருத்தமாக எழுதல் வேண்டும்.

௨. திருத்தமான எழுத்து

ஒ-ங-சூ போன்ற எழுத்துகளில் வளைவு மிகுதியாக இருப்ப தால் அவற்றைக் கவனித்துதித் ருத்தமாக எழுதல் வேண்டும். 'அ' என்னும் எழுத்தை விரைவாக எழுதினுல் அது 'சு' போலத் தோன் றும். இவ்வாறே ஆ-சூ இரண்டும் எளிதில் அறிந்து கொள்ள முடியாதபடி இருக்கும். 'இ' என்னும் எழுத்து, கி அல்லது கு போலத் தோன்றும். ஆதலின் இவற்றை நிறுத்தித் தெளிவாக எழுதல் வேண்டும். ஈ என்னும் எழுத்தில் உள்ள புள்ளிகளைச் சிலர் சரியாக இடுவதில்லை. ண என்னும் எழுத்தை நான்கு முறை சுழித்து எழுதுபவரும் உளர். ளெ, ணெ, னெ - இவற்றிற்குப் பின் கால் சேர்த்து எழுதி விடுகின்றனர். இத்தகைய குறைகள் நேராவண்ணம் எழுதுதல் வேண்டும். கீழே குறிப்பிடும் எழுத்து களுள் ஒன்று மற்றொன்று போலத்தோன்றிக் குழப்பம் உண்டாக்கு கின்றன. ஆதலின் இவற்றைக் கவனித்து எழுதல் வேண்டும்.

ந—ற	நு-று-து
னு—று	ழ-ழு-மு
ள—ன	ரு-ரு-ஞ
பி—டி	ரு-ஞ-கு
ல—வ	ரு-டு-கு
வி—ஷ	பி-வி-டி

இவையே யன்றி விரைவாக எழுதும்போது சில எழுத்துகள் ஒன்றோடு ஒன்று சேர்ந்து நின்று வேறு எழுத்துகளைப் போல் தோன்றுவதுண்டு. உ ற- ஹ; நெ-ளு; கர-கா; எக-கெ; கை-னக; ஆகியவற்றை எழுதும்போது நிறுத்தி வேறுபாடு தெரியும் வண் ணம் தெளிவாக எழுதல் வேண்டும்.

(-தொடரும்)

கழுதை அழுத கதை

எதிர்பாரா இடையூறுகளால் 'கழுதை அழுத கதை' இவ் விதழில் தொடர முடியவில்லை. அடுத்த இதழில் கட்டாயம் தொடரும்.

—அமைச்சர்.

புயல் காட்டி

அவிநாசி-இளந்தமிழன்.

புயல் காட்டி என்ருல் புயல் வருவதையோ, மழை வருவதையோ தெரியப்படுத்தும் ஒரு கருவியாகும். இஃது அமெரிக்க நாட்டில் உள்ளது. இதற்கு அவர்கள் இட்டுள்ள பெயர் 'டைரோசு' என்பது. 'டைரோசு' ஒரு செயற்கைக் கோள். இது வானில் விடப்படுகின்ற தாம். இது 90 நிமையத்திற்கு ஒரு முறை நம் உலகத்தைச் சுற்று கிறது. இது தரையிலிருந்து ஏறத்தாழ 500 கல் உயரத்தில் சுற்று கின்றது. அதனுடைய வடிவம் உருளை போன்றது. குறுக்களவு நான்கு அடி. நம் உலகிலிருந்து அனுப்பப்படும் செய்திகளைப் பெறுவதற்கு அதன் மேற்புறத்தில் ஓர் ஒலியுணர்கம்பியும் (ஏரியல்) அங்கிருந்து ஒலிபரப்பக் கீழ்ப்புறத்தில் நான்கு ஒலியுணர்கம்பி (ஏரியல்)களும் அதனிடம் உண்டு.

'டைரோசு' நிலவுலகைச் சுற்றும்பொழுது அதைச் சூழ்ந்துள்ள முகில் மண்டலத்தைப் படம் பிடிக்கிறது. இந்நிழற் படங்களைக் கொண்டு எங்கெங்குப் புயல் உருவாகின்றன என்பதையும், அவை எவ்வளவு கடுமையாக இருக்கும் என்பதையும், அவை எப்பக்கம் நோக்கி வீசும் என்பதையும் அறிந்து கொள்ளலாம். டைரோசு எடுக்கும் புகைப்படங்கள் 'தொலைக்காட்சி' வழியாக நம் உலகுக்கு வருகின்றன. அவற்ருல் அறியப்படும் செய்திகள் மற்ற நாடுகளில் உள்ள வானிலை ஆராய்ச்சிக்கூடங்களுக்கு உடனே வானெலி மூலம் அறிவிக்கப்படுகின்றன. அவ் வானிலை ஆராய்ச்சிக்கூடங்கள் புயல் வருவதைப் பற்றிப் பொதுமக்களுக்கும், கப்பல்களுக்கும், வானூர்திகளுக்கும் அறிவிக்கின்றன.

உண்மையான முழு உருவ வானிலை ஆராய்ச்சிக்கூடம் வடக்குக் கனடா நாட்டில் ஆக்சல் ஐடல்பர்க் (**Accel Hydelbourgh)** தீவில் உள்ளது. இஃது ஒரு வியத்தகு வானிலை ஆய்வுக்கூடம். இந்நிலையத்தில் பணியாற்ற மாந்தர்கள் இல்லை. இரண்டு ஆண்டு களுக்கு இவ்வாய்வுக்கூடம் மாந்தர் இல்லாமல் தன்வேலையைத் தானே செய்யுமாம். மற்றும் மூன்று மணி நேரத்திற்கு ஒரு முறை தன்னி டம் உள்ள வானிலையைப் பதிவு செய்து தானகவே வானெலி மூலம் செய்திகளை மற்ற இடங்களுக்குத் தெரிவிக்கும். அமெரிக்க நாடு இவ்வரிய அறிவியல் முன்னேற்றத்தில் இறங்கி இருப்பது பாராட்டுவதற்குரியதாகும். இதனுல் எப்போது புயல் வருமென்பதைத் தப்பாமல் அறியலாம். இதனுல் மக்கள் விழிப்பாக இருக்கமுடியும்.

பாவாணர்

—தரங்கை—பன்னீர்ச்செல்வம்.

உண்மைத் தமிழின் தொன்மைச் சிறப்பை
உலகம் உணரக் காட்டுவார்—மிக
அண்மைக் கால வழக்கைக் கூட
ஆய்ந்து மெய்யை நாட்டுவார்!

நாற்ப தாண்டாய் உழைத்துத் தமிழை
நலிப்போர் கூற்றை நூறுவார்—பிறர்
ஏற்ப தாகும் முறையில் காட்டி
இன்ப ஏணி ஏறுவார்!

தூய தமிழை மறைம லையடித்
தொடர்ந்து நாளும் பேணுவார்-தேவ
நேயர் இன்றித் தமிழின் றென்னும்
நிலைத்த புகழைப் பூணுவார்!

உலகில் சிறந்த மொழிக ளோடே
ஒப்பு நோக்கித் தேறுவார்—பகை
விலகத் தமிழின் மூலங் காட்டி
வெற்றி கண்டு வீறுவார்!

கறுத்த மேனி, வெளுத்த உள்ளம்,
கனிந்த அறிவு சான்றவர்—குறு
குறுத்த வாறு புதிய சொற்கள்,
கொள்கை நூற்கள் ஈன்றவர்!

பாவா ணரென்று தமிழர் போற்றப்
பன்மொ ழிகளைப் பயின்றவர்—தமிழ்
மூவா தென்றும் முழங்கி வளர
முதுமை வரையில் முயன்றவர்!

பேரா சிரியப் பதவி நீத்துப்
பெருமை கமழ உழைத்தவர்—நொடி
சோரா இளைஞர் பல்லா யிரவர்
சூழுங் குடும்பந் தழைத்தவர்!

தீராப் பழியைத் தீர்க்கும் முனைவர்,
தேவ நேயர் வாழ்கவே!—தனைப்
பாராட் டார்க்கும் மானங் காக்கும்
பாவா ணர்தான் வாழ்கவே!



பெரியோர் கதை!

கால்டுவெல்லர்

—புலவர் திருமேனி நாகராசன்—

முன்னுரை:- தமிழத்தாயின் தவமைந்தர் மிகப்பலர். அவள் தமிழரையே அன்றி அயலாரையும் தன் மக்களாய்க் கொண்டு உயர்ந்தவள். எங்கோ பிறந்து எம்மொழியோ கற்று, எதனையோ வளர்க்க வந்த அயல்நாட்டு அறிஞரெல்லாம் அவளின் திறம் கண்டு செயல் மறந்து அவளுக்கே தொண்டராயினார் என்பது வரலாறு. அவருள் அழியாப் புகழுடைய அயல்நாட்டு அறிஞர் பர். சி. யு. போப்பையர், வீரமாமுனிவர், வின்சுலோ, பர். கால்டுவெல்லர் பிறருமாம். இங்கு, அவருள் ஒருவரான கால்டுவெல்லர் வரலாற்றை வரன் முறையாய்க் காண்போம்.

பிறப்பு வளர்ப்பு:- கால்டுவெல்லர் அயர்லாந்து நாட்டில் கிளாடி என்னும் சிற்றூரில் 1814-ஆம் ஆண்டில் பிறந்தார். அவர் தாயும் தந்தையும் இறையன்பிலும் அறிவின்திறத்திலும் சிறந்தவர்கள். கால்டுவெல்லர் அவர் பெற்றோருக்கு அருமருந்தன்னபிள்ளை. அவர் அன்னை அவருக்கு அன்பையும், பண்பையும் கற்பித்தார்; அவர் தந்தை அவருக்கு அறிவையும், திறனையும் ஊட்டினார். கால்டுவெல்லர் இளமையில் தம் பெற்றோரின் ஆழ்ந்த கண்காணிப்பிலேயே வளர்ந்தார். "நல்ல குடும்பம் பல்கலைக்கழகம்" என்பது ஒரு நன்மொழி. கால்டுவெல்லர் குடும்பத்திற்கு இம்மொழி முற்றிலும் பொருந்தும்.

கல்வி:- கால்டுவெல்லர் பிறந்து பத்தாண்டு வரை கிளாடி நகரிலேயே சிறப்பாகக் கல்வி கற்றார். பின்னர் பெற்றோருடன் இசுக்காத்துலாந்து நாட்டிற்குச் சென்று ஆங்கில இலக்கியங்கள்

பயின்று தேர்ந்தார். கால்டுவெல்லரின் அறிவின் திறம்வியந்த அவர் தந்தை அவரைக் கவின்கலைக் கல்லூரியிற் சேர்த்தார். அங்கு அவர் ஓவியக்கலை கற்றுப் பரிசுகள் பெற்றார். ஆயினும் அவருக்கு ஓவியக்கலையை வாழ்க்கைத் தொழிலாக மேற்கொள்ள விருப்பமில்லை. இறைவனது ஆற்றலையும், பெருமையையும் உணர்த்தும் மெய்யறிவு நூற்களையே அவரது மனம் விரும்பிக் கற்றது. அதன் பயனாக உலகெங்கும் திருவருளின் பேரருளைப் பரப்பிச் சமயத் தொண்டாற்றுவதே சிறந்ததெனத் தெளிந்தார். தம் இருபதாம் அகவையில் கால்டுவெல்லர் இலண்டனில் அமைந்த சமயத்தொண்டர் கழகத்தைச் சேர்ந்து கிளாசுகோ பல்கலைக் கழகத்தில் ஐரோப்பிய தென்மொழிப் பொத்தகங்களையும், சமய நூற்களையும் சிறப்புறக் கற்று இளங்கலை (B. A.,) பட்டப்படிப்பினில் முதன்மையாகத்தேர்வு பெற்றுப் பரிசும் பெற்றார்.

தமிழ்க்கல்வி:- அக்காலத்தில் தென்தமிழ் நாட்டில் பணிசெய்ய இலண்டன் மாநகர்த் தொண்டர்க்கழகம் தக்கார் ஒருவரைத் தேடியது. அது கால்டுவெல்லரைத் தேர்ந்தெடுத்தது. அவர் 1838-ஆம் ஆண்டில் சென்னைத்துறைமுகம் வந்திறங்கினார். அவர் தமிழ்ப் புலமை நிறைந்த ஐரோப்பியத் தொண்டர்களுள் ஒருவரான துருவருடன் மூன்றாண்டு தங்கியிருந்து முறையாகத் தமிழ் பயின்றார். பின்னும் அவர் தமிழ்க்கல்வியின் அருமை பெருமைகளை வின்சுலோ, போப்பையர், பவர், ஆத்தர்சன் போன்ற சான்றோர் துணையால் ஐயமற அறிந்து கொண்டார்.

அலுவல்:- கால்டுவெல்லருக்கு விதிக்கப்பட்டிருந்த அலுவல் தென்றமிழ் நாட்டில் கிறித்துவச் சமயத்தைப் பரப்புவதாகும். அவர் அதனை முற்றவும் சிறப்பாகவே செய்தார். மக்கட்குத் தொண்டு செய்வதின் வழியாக அவர், தம் சமயத்தைப் பரப்பினார். கால்டு வெல்லர் தமிழ் மொழி பேசி, தமிழ் மக்களோடு பழகி, தமிழ் முனி போல் வாழ்ந்து கிறித்துவச் சமயத்தைத் தமிழ் மக்கள் தழுவும் படி செய்தார். அவர் முயற்சியால் பொருநை நாட்டில் கிறித்துவம் நிலைபெற்றது. அவரின் சமயத்தொண்டைப் போற்றிய கிறித்துவ மேலாளர் அவரைச் சென்னை மாநிலத் தலைமைக்குழுவின் துணைவராகத் தேர்ந்தெடுத்தனர்.

இல்லறம்:- கால்டுவெல்லர் தமது இருபத்தொன்பதாம் அகவையில் இருபத்தோர் அகவையினராகிய எலிசா அம்மையாரை மணம் செய்து கொண்டார். அவர் கணவனுக்கு ஏற்ற மனைவி. கால்டுவெல்லரும் எலிசா அம்மையாரும் கருத்தொருமித்து இல்லறத்தை நடத்தினர். அவ்விருவர்க்கும் ஒரு மகனும் இரு மகளிரும் பிறந்தனர். ஆடிங்கிதன் என்ற அவர் மைந்தர் ஆசுத்திரிலேயா நாட்டில் சிறந்த மருத்துவராக விளங்கியவர். பெண் மக்களுள் உலுயிசா என்ற இளையள் போர்வீரனை மணந்து சிலவாண்டுகளில் மாண்டு போயினள். மூத்தவள் வியாத்தர் என்பாரை மணந்தாள். வியாத்தர், மாமன் கால்டுவெல்லருக்கு ஏற்ற மருகர்.

பண்புகள்:- கால்டுவெல்லர் பண்புகளின் உறைவிடமாகத் திகழ்ந்தவர். அவர் குணமெனும் குன்றேறி நின்ற சான்றோர். ஒரு சமயம், பெரிய வரவேற்பினை ஏற்க வந்த கால்டுவெல் அவ்வேளை கிணற்றில் அறியாது விழுந்த ஏவலன் ஒருவனை எவரும் மீட்க அஞ்சிய போது தாமே கிணற்றில் இறங்கி அவனை மீட்டு அருளியிருக்கிறார். என்னே அவரின் அருளும், துணிவும்! கால்டுவெல்லர் எங்குச் செல்லினும் நடந்தே செல்வார். கூரைக் குடிலிலேயே தங்கி இருப்பார். பனைநார்க் கட்டிலில்தான் படுத்துறங்குவார். எளிமைப்பண்புக்கு இவர் ஏற்புடைய சான்று அன்றோ? பிறிதொரு காலத்தில், அவர் வாழ்ந்த இடையன்குடியில் பஞ்சம் வந்துற்ற வேளை அரசியலார் மக்களை வாழ்விக்க எடுத்துக் கொண்ட முயற்சிகளுள் அவரும் பெரும்பங்கு கொண்டு உழைத்திருக்கின்றார். மற்றும், இன்சொல் உடைமை, அசைவின்மை பிறவும் அவரின் பண்புகளென நாம் அறிதல் வேண்டும்.

தொண்டு:- கால்டுவெல்லரின் பொதுத் தொண்டைச் சமயத் தொண்டு, மக்கட்தொண்டு, மொழித்தொண்டு என மூவகைகளாகப் பிரிக்கலாம்.

1. சமயத்தொண்டு:- கால்டுவெல்லர் கிறித்துவ சமய வழிபாட்டு நூலை அறுவர் குழுவில் இடம் பெற்று அழகுத் தமிழில் மொழி பெயர்த்தார். பின்னரும் புதிய பழைய ஏற்பாடுகளைச் செப்பஞ் செய்ய உருவான பன்னிருவர் குழுவிலும் சேர்ந்து பழுதற மொழிபெயர்ப்புப்பணி செய்திருக்கிறார். இவ்வாறு, கிறித்துவ மறைகளை மொழிபெயர்க்கத் தொண்டாற்றியதோடு அன்றி, அவர் பாளையங்

கோட்டைக்குப் பக்கத்தில் இடையன்குடியில் முப்பத்து மூன்று ஆண்டுகள் அரும்பாடுபட்டுக் கிறித்துவக் கோயில் ஒன்றும் காண்பார் கனிந்து போற்றக் கட்டியிருக்கின்றார்.

2. மக்கள்தொண்டு:- கால்டுவெல்லர் இடையன்குடிக்கு முதன் முதலில் சென்றபோது அவ்வூர் கள்ளியும், முள்ளியும் படர்ந்து புதரும் காடும் சூழ்ந்து ஒழுங்கற்ற தெருவினதாய், ஒலையற்ற குடிலினதாய்க் காட்சி அளித்தது. அதன் பின்னர் அப்பெரியார் கள்ளியும் முள்ளியும் களைந்து, புதரும் காடும் அழித்து நேரிய சாலைகள் அமைத்து, சாலைகள் இருமருங்கிலும் நிழல் தரும் மரங்களை நட்டு, செவ்விய முறையில் சிற்றில்கள் கட்டிக் கொடுத்து, சிறுவர் சிறுமியர் கற்கப் பள்ளிகள் அமைத்துக் கல்வியும் கற்பித்து ஒப்பற்ற மக்கள் தொண்டாற்றியுள்ளார்.

3. மொழித் தொண்டு:- கால்டுவெல்லரின் மூவகைத் தொண்டுகளினுள்ளும் முதன்மையானது மொழித் தொண்டே. அம்மொழித் தொண்டு, தமிழ் மொழித் தொண்டு அன்றிப் பிறிது இல்லை. தமிழையும், அதன் சேய்மொழிகளையும் ஆராய்ந்து, "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" என்னும் பெருநூலை இயற்றி உலகுக்கு அளித்தவர் கால்டுவெல்லர். ஒரு பல்கலைக்கழகம் செய்ய வேண்டிய மொழியாராய்ச்சியைத் தாமே தனி ஒருவராக நின்று செய்து காட்டிய திறலினர் கால்டு வெல்லர். அவரின் ஆராய்ச்சி வெளிவருவதற்கு முன்னம், இந்தியத் துணைக் கண்டத்தில் வழங்கும் மொழிகள் அனைத்தும் ஆரிய வகுப்பைச் சேர்ந்தனவாக ஐரோப்பிய ஆராய்ச்சியாளர்கள் கருதியும் எழுதியும் வந்தனர். ஆனால், கால்டுவெல்லரின் ஆராய்ச்சி முடிவுகளுக்குப் பின்னர், முன்னைய ஆராய்ச்சிகள் எல்லாம் நெருப்பில் விழுந்த பஞ்சுபோல அழிந்து போயின. கால்டுவெல்லரின் ஆராய்ச்சி தமிழ் மொழியை உலகறியச் செய்விக்கலாயிற்று. ஒப்பிலக்கணப் பெருநூலுள் அவர் கூறும் கருத்துகளில் இரண்டினை மட்டும் இங்குச் சுட்டுவேன். (அ.) "வடமொழியிலிருந்து திராவிட மொழிகள் பிறந்திருக்க வேண்டும் என்ற கொண்ட பழங்கொள்கை குருட்டுக் கொள்கை என்பதில் ஐயமில்லை.' (ஆ) "திராவிட மொழிகள் அனைத்தினும்மிகவும் திருந்திய பண்பட்ட நிலையில் உள்ள தமிழ் மொழியோ வேண்டுமானால், வடசொற்களை அறவே அகற்றித் தனித்தியங்கும்

ஆற்றல் வாய்த்திருப்பதோடன்றி அவற்றின் உதவி இல்லாமல் மிகவும் மேம்பட்டு, வளமுற்று மிளிரும் ஆற்றலும் வாய்ந்ததாகும்''. கால்டுவெல்லருக்கு மட்டும் தொல்காப்பியமும், வேறு சில கழக இலக்கியங்களும் கிடைக்கப் பெற்றிருக்குமாயின் அவரது ஆராய்ச்சியால் தமிழ் அனைத்து உலகத்தையே ஓர் ஆட்டு ஆட்டி வைத்திருக்கும்! நம் வினைப்பயனால், அவர் காலத்தில் அவருக்கு அவை கிடைக்கவே இல்லை!

சிறப்புகள்:- கால்டு வெல்லர் பெற்ற சிறப்புகள் பலவாகும். திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம் எழுதியதால், அவருக்குக் கிளாசுகோ பல்கலைக்கழகம் பண்டாரகர் (டாக்டர்) பட்டம்தந்தது. அவரது சமயப்புலமையை மெச்சி இடர்சாம் நகரில் இருந்தபல்கலைக் கழகமும் பண்டாரகர் சிறப்புச்செய்தது. அறிஞர் அனைவரும் கால்டுவெல்லரை 'ஒப்பிலக்கணப் பேரறிஞர்' எனச் சிறப்பித்தனர். பொருநை நாட்டு மக்களோ அவரை அன்பொழுக 'தந்தை' என்றே அழைத்தனர். இவ்வாறு கற்றார்க்கும் கல்லாதார்க்கும் களிப் பருளிச் சிறந்தவர் கால்டுவெல்லர்.

இறுதிக்காலம்:- ஐம்பத்துமூன்று ஆண்டுகள் தமிழகத்தில் அரும்பணி ஆற்றிய கால்டு வெல்லர் முதுமை காரணியமாகத் தமது அரிய பெரிய பொறுப்புகளினின்றும் 1891-ஆம்ஆண்டில் விடுபட்டுக் கோடைக்கானலுக்குச் சென்றார். அங்குத் தம்மில்லாளோடு இளைப் பாறி வந்தார். ஆனால் அங்கு நெடுநாள் வாழ்ந்திருக்கவில்லை. கால்டு வெல்லர் திடுமென நோயுற்று, நோயுற்ற ஏழு நாட்களுள் இம்மண் ணுலக வாழ்வை நீத்தார், கால்டு வெல்லர் மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு அல்லவா?

முடிவுரை:- அயர்லாந்து நாட்டில் பிறந்து இசுகாட்லாந்து நாட்டில் வளர்ந்த கால்டுவெல்லரின் வாழ்நாளின் மிகப்பெரும்பகுதி தென்தமிழ் நாட்டிற்கே உரியதாயிற்று. அயல் நாட்டிலே தோன் றிய அவர் வாழ்க்கை அருந்தமிழ் நாட்டிலே முடிவுற்று விட்டது. அவர் இன்றில்லை; ஆனால் அவர் புகழ் என்றும் இருக்கும். ஓர் அயலார் தமிழ்த்தாயின் தவ மைந்தராகி விட்டார்; தமிழராகிய நாம் நம் தாயின் கொலைஞராகி வருகிறோம்! 0

முத்து மொழிகள்!

தொகுப்பு: வை, இளங்கோவன்.

* தானாக வருவதன்று சூழல். சூழலை மாந்தன் தானே உண்டு பண்ணிக் கொள்ளல் வேண்டும். —அறிஞர் பெர்னார்டுசா.

* ஒருவனை நன்கு தெரிந்து கொள்ள வேண்டுமா? அவன் விடைகளைப் பார்க்காதே. கேள்வியைப் பார்? —வால்டேர்.

* நாம் வீணாகக் கழிக்கும் ஒவ்வொரு வினாடியும் நம் வாழ்நாளில் மீண்டும் பெறமுடியாத பெருஞ்செல்வம்·

—காரல் மார்க்சு.

* பிறருடைய குற்றங்களை ஒரு போதும் பேசாதே. அப்படிப் பேசுவதால் உனக்கு ஒரு பயனும் விளைவதில்லை.

—விவேகானந்தர்.

* நல்லவனைக் கண்டால் பின் பற்று. தீயவனைக் கண்டால் அவனிடம் உள்ள கெட்ட குணங்கள் உன்னிடம் என்ன இருக்கின்றன என்று தெரிந்து திருத்திக்கொள்.

—அறிஞர் கன்பூசியசு.

* பழம் நிறைந்த மரம் எப்போதும் கனத்தினால் தாழ்ந்து வளையும்; நீ பெருமையடைய வேண்டுமானால் அடக்கத்தோடும் பணிவோடும் இரு. —இராமகிருட்டிணர்.

* தோல்வி வந்தால் அது விருப்பமானது என்று காட்டிக்கொள். வெற்றி வந்தால் அஃது உனக்குப் பழக்கமானது போல் இருந்து கொள். —ஓர் அறிஞன்.

* தன்னம்பிக்கை யில்லாதவனின் வாழ்க்கை காலால் நடப்பதற்குப் பகரமாகத் தலையால் நடப்பதை யொக்கும்.

—எமர்சன்.

* ஒரு மாந்தனின் அல்லது ஒரு கூட்டத்தின் பெருமையை அளப்பதற்கு இந்த உலகில் ஈகம் (தியாகம்) என்ற ஒரே ஒரு துலாக்கோல் தான் உண்டு. —ஓர் அறிஞர்.

* எப்படி மெழுகுத்திரியில் நெருப்புப் பற்ற வைத்ததும் அது ஒளி விடத் தொடங்குகிறதோ அப்படியே மாந்தனின் நல்ல செயல்களே இந்த இருண்ட உலகில் சுடர்விட்டு ஒளிவீசும்.

—சேக்சுபியர்.

தேனீரா? தேநீரா?

டீ (Tea) என்னும் சொல் தொடக்கத்தில் டே (Teay) என்று வழங்கிற்று. அதனைத் தமிழில் 'தே' என்று வழங்கினர். தே என்னும் சொல்லுடன் நீர், தண்ணீர், இலை, தூள் ஆகியவை சேர்ந்து முறையே தேநீர், தேத்தண்ணீர், தேயிலை, தேயிலைத்தூள் என்று வழங்கின. காலப்போக்கில் டே (Teay) என்பது டீ (Tea) என்று திரிந்து வழங்கலாயிற்று. அப்போதும் தமிழில் இடம்பெற்றுவிட்ட 'தே' மாறுதல் இன்றியே வழங்கியது. பின்னர் மெல்ல மெல்ல 'டீ' என்னும் சொல்லும் தமிழில் நுழைந்து வழங்கிற்று. 'டீ' நுழைந்த பின்னரும், முன்பே வழக்கத்திலிருந்த தேநீர், தேயிலை முதலிய சொற்கள் மாறவில்லை. இன்னும் அவை மாறுதலின்றியே வழங்கி வருகின்றன. தேநீர் என்பதைச் சிலர் தேனீர் என்று தவறாக எழுதி வருகின்றனர். தே + நீர் = தேநீர் என்றும், தேன் + நீர் = தேனீர் என்றும் ஆகும். தேயிலைத் தூளிலிருந்து சாறு இறக்கித் தேநீர் வழங்கும் கடைக்குத் 'தேனீர் விடுதி' என்ற பெயரை எழுதலாமா? அங்கே தேன் நீரா விற்கின்றனர்?

—மு. வை. அரவிந்தன்.

ஆற்காடா? ஆர்க்காடா?

ஆற்காடு என்பது பிழை. ஆர்க்காடு என்பதே திருத்தமான வடிவமாகும். ஆர் + காடு என்று அத் தொடர் பிரியும். ஆர் என்பது ஆத்தி மரத்தைக் குறிக்கும். ஆர் + ஊர் என்பவை ஆரூர் ஆகி 'திரு' பெற்று திருவாரூர் ஆகியுள்ளது. 'திரு' இன்றி ஆரூர் என்று வழங்கிய ஊர் இன்று அரூர் என்று வழங்குகிறது. சிலர் ஆற்காடு என்பதே திருந்திய வடிவம் என்று கருதி, ஆல் + காடு என்று பிரித்து ஆலமரக் காடு என்று பொருள் கூறுவர். ஆல் என்னும் சொல் பிறசொல்லுடன் சேர்ந்து வரும்போது 'அம்' என்னும் சாரியை பெற்றே வரும். ஆலங்கிளை, ஆலம்பழம், ஆலம் விழுது, ஆலங்கன்று என்று வழங்குகின்றன. இவ்வாறே ஆல் + காடு என்னும் சொற்கள் சேரும்போது 'அம்' பெற்று ஆலங்காடு என்றே வரும். ஆற்காடு என்று வராது. ஆதலின் ஆர்க்காடு என்பதே சரியான வடிவமாகும். பழந்தமிழ் நூல்களில் ஆர்க்காடு என்ற வழக்கே உள்ளது.

—மு. வை. அரவிந்தன்.

கிறித்தவப் பெயர்களுக்கேற்ற தமிழ்ப் பெயர்கள்.

கிறித்துவ மதத்தைச் சார்ந்த அன்பர் சிலர் தத்தம் பெயர்களுக்கேற்ற சரியான மொழி பெயர்ப்புகள் எவையென்று அடிக்கடி எழுதிக் கேட்கின்றனர். இந்தத்தொடரில் கிறித்துவப் பெயர்களுக்கான தமிழ்ப் பெயர்களை வெளியிட எண்ணியுள்ளோம். அன்பர்கள் பயன்படுத்திக் கொள்க. இத்தொடர் முடிந்தவுடன் இசுலாமியப் பெயர்களுக்கான மொழிபெயர்ப்பு வெளிவரும்.

ஆட்வர்பெயர்

கிறித்துவப் பெயர்	அது, எந்த மொழி	அதன் பொருள்	அதற்கேற்ற தமிழ்ப்பெயர்
Aaron ஆரான்	ஈபுரு	ஒளி, நெடுங்குன்றம்	ஒளியன் நெடுங்குன்றன்
Abbot ஆபட்	,,	தந்தை	ஐயன் அப்பன்
Abel ஆபெல்	,,	அகலம்	மார்பன்
Abraham ஆபிரகாம்	,, ,,	யாவர்க்கும் தந்தை	முதற்றந்தை முதலப்பன்
Adam ஆடம்	,,	செந்நிலம் நிலமாந்தன்	செந்நிலன் நிலத்தன்
Addison அடிசன்	ஆங்கில சாக்சானியம்	ஆடத்தின் பிறங்கடை	செந்நிலப் பின்றை
Adolph அடால்ப்	தியுத்தானியம்	நல்ல ஓநாய்	நற்றுணையன்
Alan ஆலன்	கெல்திக்	பல்லிசை, பண்ணோசை.	பண்ணன் பண்ணிசையன்
Alban ஆல்பன்	இலத்தீன்	வெள்ளை	வெளிறன் வெள்ளியோன்
Albert ஆல்பர்ட்	தியுத்தானியம்	சிறந்து ஒளிமிக்க	உயரொளியன் மீவொளியன்
Alaxander அலெக்சாண்டர்	கிரீக்	மக்களின் காவலன்	காவலன்
Alfonso Alphonse அல்போன்சு	தியுத்தானியம்	போருக்கு ஆயத்த மானவன்	மறவன் படைமுனைவன்

(தொடரும்)

பொதுமை உலகம் வரல் வேண்டும்!

யார்தான் எப்படிப் போனு லென்? என்
ஏர்தான் நிலத்தை உழல் வேண்டும்—என்
வேர்தான் ஊன்றி எழல்வேண் டும்; என்
பேர்தான் உலகம் தொழல் வேண்டும்"—என்
போர்தாம் பெருகிப் படர்ந்தார், தம்பி!
பொதுமை உலகம் வரல் வேண்டும்—ஒரு
புதுமை விளைவு பெறல் வேண்டும்!

''என்றன் மனைவி மக்கள் தாமே
என்றும் நலமாய் இருந்திடுக—பிறர்
தின்றால் என்ன? தேய்ந்தால் என்ன?
திசைகள் தோறும் திரிந்தென்ன?"—இவ்
வொன்றே குறியாய் உழல்வார், தம்பி!
உழைப்போர் உலகம் வரல் வேண்டும்!—ஒவ்
வொருவர் நலமும் பெறல் வேண்டும்!

''என்வீ டொன்றே இப்பெருந் தெருவில்
எடுப்பாய் நின்றே விளங்கிடுக!—பிறன்
தன்வீ டெல்லாந் தரையாய்ப் போக;
தரையும் வெடித்துக் குழிவிழுக!"—என்
றின்னே நினைப்பார் பெருகினர், தம்பி!
இனிதோர் உலகம் வரல்வேண்டும்—இங்
கெவரும் சமமாம்-எனல் வேண்டும்!

"பெய்யும் மழையென் வயலிற் பெய்க;
பிணிகள் இன்றி நான்வாழ்க;—என்
கையும் காலும் தூண்போல் ஆகுக;
கடவு ளே, துணை துணை"யென்று—தான்
உய்யும் வழியே நினைப்பார்; தம்பி
ஒருமை உலகம் வரல் வேண்டும்—பிறர்
உளர்எனும் நினைவும் பெறல் வேண்டும்!

துரை-மாணிக்கம்

தமிழ்ச் சொல் வளம்.

கொழுந்து வகை:

துளிர் அல்லது தளிர் — *நெல், புல், முதலியவற்றின் கொழுந்து.*
முறி அல்லது கொழுந்து — *புளி, வேம்பு „ கொழுந்து.*
குருத்து — *சோளம், கரும்பு, தென்னை, பனை „ „*
கொழுந்தாடை — *கரும்பின் நுனிப் பகுதி.*

காய்ந்த இலை வகை:

சண்டு — *காய்ந்த தாளும், தோகையும்.*
சருகு — *காய்ந்த இலை.*

இலைக் காம்பு வகை:

அடி — *தாள், தோகை இவற்றின் காம்பு.*
கம்பு — *இலையின் காம்பு.*
மட்டை — *ஓலையின் காம்பு.*

பூமடல் வகை:

பூ — *வாழை மடல்.*
மடல் — *தாழை, வாழை முதலியவற்றின் மடல்,*
பாளை — *தென்னை, பனை „ „*

பூவின் நிலைகள்:

அரும்பு — *பூவின் தோற்ற நிலை.*
போது — *பூ விரியத் தொடங்கும் நிலை*
மலர் (அலர்) — *பூவின் மலர்ந்த நிலை.*
வீ — *மரஞ்செடியினின்று பூ கீழே விழுந்த நிலை.*
செம்மல் — *பூ வாடின வகை.*

அரும்பு வகை:

அரும்பு — *மல்லிகை, முல்லை முதலியவற்றின் அரும்புபோல் சிறிதாயும் கூறாயும் இருப்பது.*
மொட்டு — *அடுக்கு மல்லிகை, நந்தியாவட்டம் முதலியவற்றின் அரும்புபோல் சற்றுப் பெரிதாயும் மொட்டையாயுமிருப்பது.*
முகை — *தாமரை, சதுரக்கள்ளி முதலியவற்றின் அரும்புபோல் பெரிதாயிருப்பது.*

பூக்காம்பு வகை:

காம்பு — *சிறியது.*
தாள் அல்லது தண்டு — *பருமையும் மென்மையுமுள்ளது.*
நாளம் — *உட்டுளையுள்ளது.*

இதழ் வகை:

அல்லி — *அகவிதழ்.* **புல்லி** — *புறவிதழ்.*
இதழ் — *சிறியது.* **மடல்** — *பெரியது.*

—(தொடரும்)

[பாவாணர் — *சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்*]

தென்மொழி மின் அச்சகம், கடலூர்–1. தமிழகம்.